[1979 அக்டோபர் 31

தமிழ்நாடு பரிசுச் சீட்டு குலுக்கல்

* வினா 42.—திரு. க. மருதாசலம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசால் நடத்தப்பட்டு வரும் பரிசுச் சீட்டுக் குலுக்கலை கோவையில் நடத்தத் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) தற்சமயம் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. க. மருதாசலம் : குழந்தைகளுக்கான விசேஷ குலுக்கல்கள் எப்போது குலுக்கப்படுகிறது? இதில் முறைகள் மாறுபட்டுள்ளதா? குழந்தைகள் பரிசுகளைப் பெறுவார்களா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்): குழந்தைகளுக்கான விசேஷ குலுக்கல் டிசம்பர் மாதம் குலுக்கப் படுகிறது. இது மாண்புமிகு முதல்வரின் விருப்பத்திற்கிணங்க உருவான திட்டம் ஆகும். சாதாரண குலுக்கலில் முதல் பரிசு ரூ. 50,000—இரண்டு பரிசுகள் ஆகும். ஆனால் குழந்தைகளுக் கான விசேஷ குலுக்கலில் முதல் பரிசு 2,000 ரூபாய். 500 முதல் பரிசுகள் உண்டு. 500 ரூபாய் வீதம் ஆயிரம் இரண்டாம் பரிசுகள் உண்டு. அதிர்ஷ்டசாலி குழந்தைகள் முதல் பரிசைப் பெற்றவர்களாக இருந்தாலும் இரண்டாம் பரிசைப் பெற்றவர் களாக இருந்தாலும் ஊனமுற்றவர்களாக இருந்தால் அவர்கள் பெறும் பரிசுத் தொகையோடு 1,000 ரூபாய் அதிகம் கொடுக்கப் படும். ஒரு குழந்தை ஒரு பரிசைத்தான் பெற முடியும். ஒவ்வொரு சீட்டின் விலை 50 காசுகள் ஆகும். குழந்தைகளின் விசேஷ குலுக்கல் சீட்டு கடைகளில் வியாபாரம் ஆகாது. மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்படும். பரிசு பெற்ற அதிர்ஷ்டசாலி குழந்தைகளுக்கு பரிசுத்தொகையை மாவட்ட ஆட்சித் தலைவரே வழங்குவார். மற்ற பரிசுச் சீட்டுகள் ஏஜென்ட் மூலம் விற்கப்படுகிறது. அதற்கு கமிஷன் 11½% உண்டு. 10% பரிசு விழுந்த சீட்டுக்கு போனஸ் உண்டு. அவைகள் எல்லாம் குழந்தைகளின் விசேஷ குலுக்கலில் கிடையாது. இதன் பரிசுச் சீட்டினையும் பரிசுத் தொகையையும் 14 வயதும் அதற்குக் கீழ் வயதும் உள்ள குழந்தைகளே பெறத் தகுதி படைத் தவர்கள்.

திரு. கு. ரமணி : தமிழக அரசினுடைய இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தில் அதிகப்படியான பேர்களுக்குப் பரிசு கிடைக்கும்படியான முறையில் ஒரு லட்சத்திற்குக் கீழான

1979 அக்டோபர் 31]

தொகைகளைப் பரிசாக வழங்கும் முறையில் அந்தத் திட்டத்தைத் திருத்தியமைத்து அதிகப்படியான பேர்களுக்குப் பரிசு கிடைக்க ஏற்பாடு செய்யும் திட்டம் உண்டா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) ; இப்போது சாதாரண குலுக்கலில் முதல் பரிசு 50,000 ரூபாய் தான் வழங்கப்படுகிறது.

திரு. க. மருதாசலம் : இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டு என்பதை மாண்புமிகு பேரவைச் செயலர் அவர்கள் அறிவார்கள். அதையொட்டி இந்த ஆண்டு சிறப்புக் குலுக்கலை கோவையில் குலுக்க முயற்சிப்பார்களா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்): இந்த ஆண்டு குலுக்கல் சென்னையில் குலுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு குலுக்கப்படும் இந்த விசேஷ பரிசுச் சீட்டு எத்தனை வரிசைகள் வெளியிடப்படும்? அந்த வருவாய் எதற்காகச் செலவழிக்கப்படும்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) : ஐந்து வரிசைச் சீட்டுகள் வெளியிடப்படும். அந்த வருவாய் முழுவதும் குழந்தைகள் நலன் பேணும் திட்டங்களுக்காகப் பயன் படுத்தப்படும்.

மாநில நிலவள வங்கி உதவி தொழில் நுட்ப மேலாளர்கள்.

* வினா 43—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியில் கடந்த மூன்றாண்டு காலமாக பணிபுரிந்து வந்த உதவி தொழில் நுட்ப மேற்பார்வையாளர்கள் பதவி மூப்பு (Seniority) பார்க்கப்படாமல் கூட வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(இ) அவ்வாறு வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு மாற்று ஏற்பாடுகள் ஏதும் செய்யப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழக உதவியுடன் செயல்படும் சிறுபாசன மற்றும் சிறு பாசனமல்லாத திட்டங்களில், திட்டங்களை அமுல் படுத்த தொழில் நுட்ப மேற்பார்வையாளர்கள் ஒவ்வொரு